**கவனிக்க.-** *2009.06.26 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1609 - 2009 ජූලි මස 03 වැනි සිකුරාදා - 2009.07.03**

*1609 ஆம் இலக்கம் – 2009 ஆம் ஆண்டு யூலை மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 804 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 805 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | – |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 804 | ஏல விற்பனைகள் | 807 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) பழக்கப்பட்ட யானைகளின் உரிமையாளர்கள் ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2009, ஏப்பிறல் 30 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) ஊழியர் சகாய நிதிய (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்) சட்டமூலம் 2009, ஏப்பிறல் 30 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(iii) அல்ஹசன் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2009, மே 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வராராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பததிர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2009, யூலை மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, யூன் மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2009 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**காணி, காணி அபிவிருத்தி அமைச்சு**

இலங்கை நில அளவைத் திணைக்களம்

**கேள்வி விலை கோரல்**

நில அளவைத்திணைக்களம் பின்வரும் சேவைகளுக்கு முத்திரை இடப்பட்ட கேள்வி விலைகளை கோருகின்றது :-

(அ) நில அளவையாளர் நாயகம் அலுவலகத்திற்கான பாதுகாப்புச் சேவை

(ஆ) நில அளவையாளர் நாயகம் அலுவலகத்திற்கான சுத்திகரிப்பு சேவை

1. பாதுகாப்பு சேவைக்காக விலை கோருபவர்கள் பாதுகாப்பு அமைச்சில் பதிந்திருக்க வேண்டும்.

2. ஒவ்வொரு விலை கோரலுக்கும் மீளளிக்கப்படாத வைப்புப்பணமாக ரூபா ஐநூறு (ரூபா 500) ஐச் செலுத்தி அது சம்பந்தமான பெறுதல் நிபந்தனைகளையும் ஆவணங்களையும் சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகரிடமிருந்து (கட்டிடங்கள் மற்றும் உபகரணங்கள்) பெற்றுக்கொள்ளமுடியும்.

3. ஒவ்வொரு சேவைக்கும் முத்திரையிடப்பட்ட கேள்வி விலை கோரல் மீளப்பெறக்கூடிய பத்தாயிரம் ரூபா வைப்புப் பணத்துடன் (ரூபா 10,000) பதிவுத் தபால்மூலம் சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் (கட்டிடங்கள் மற்றும் உபகரணங்கள்), நில அளவையாளர் நாயகம் அலுவலகம், 150, கிருல வீதி, கொழும்பு - 05 என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும் அல்லது இதே விலாசத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்வி கோரல் பெட்டியில் 2009.07.14 அன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன்பதாக இடப்படவேண்டும். இதற்கு பிந்திகிடைக்கும் கேள்வி விலை கோரல்கள் நிராகரிக்கப்படும். விலை கோரல்கள் 2009.07.14 அன்று பிற்பகல் 2.05 மணிக்கு திறக்கப்படும். விலை கோருபவர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகள் விலை கோரல்கள் திறக்கப்படும் நேரத்தில் சமுகமளித்திருக்கமுடியும்.

நில அளவையாளர் நாயகம்.

நில அளவையாளர் நாயகம் அலுவலகம்,
150, கிருல வீதி,
கொழும்பு - 05,
2009.06.16.

7-41

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

**பாவனைக்குதவாத பொருட்கள் ஏல விற்பனை**

திருகோணமலைப் பிரிவு பொலிஸ் நிலையங்களில் இருக்கும் பாவனைக்குதவாத கீழ்வரும் பொருட்கள் திருகோணமலை பொலிஸ் அத்தியட்சகர் காரியாலய வளவில் 2009.07.21 ஆந் திகதி காலை 9.00 மணிக்கு பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படும்.

1. 2009.07.21 ஆந் திகதி காலை 9.00 மணிக்கு ஏலவிற்பனை ஆரம்பிக்கப்படும். 2009.07.20 ஆந் திகதி காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரை பொருட்களை பார்வையிட முடியும். வருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையைக் கொண்டுவருதல் வேண்டும்.

2. ஏல விற்பனையில் பெற்ற பொருட்களுக்கு அன்றைய தினமே பணம் கொடுக்கப்பட வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

3. ஏலவிற்பனையில் பெற்ற பொருட்கள் அன்றைய தினமே காரியாலய வளவினுள் இருந்து வெளியே கொண்டு செல்ல வேண்டும். அதன்பின் அப்பொருட்கள் சம்மந்தமாக பொறுப்பு ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

4. இவ் ஏலவிற்பனை சம்பந்தமாக எல்லாவிதத் தீர்மானங் களும் திருகோணமலை பொலிஸ் அத்தியட்சகரால் எடுக்கப்படும்.

| | | |
|---|---|---|
| (1) | கோடரி | 06 |
| (2) | அலுமினியம் கேத்தல் | 01 |
| (3) | அலுமினியம் கோப்பை | 11 |
| (4) | அலுமினியம் பீங்கான் | 01 |
| (5) | அலுமினியம் குடம் | 01 |
| (6) | அலுமினியம் ஜக் | 03 |
| (7) | தொலைக்காட்சி அன்டனா | 03 |
| (8) | கணக்குப்பன்னும் இயந்திரம் | 06 |
| (9) | மேசன் தாட்சி | 06 |
| (10) | பீப்பாய் | 03 |
| (11) | மின்கலம் 12வட் | 02 |
| (12) | புஸ்கட்டர் | 01 |
| (13) | அலவாங்கு | 03 |
| (14) | பேசின் | 01 |
| (15) | கணக்கிடல் கருவி | 11 |
| (16) | துவிச்சக்கர வண்டி | 26 |
| (17) | கூரை மின்விசிறி | 51 |
| (18) | டென் ஓவர் சுவிட்ச் | 01 |

| | |
|---|---|
| (19) கசட் ரெக்கோடர் | 03 |
| (20) கை தேங்காய்த் துருவி | 16 |
| (21) இரும்புக் கதிரை | 171 |
| (22) கூரைமின் விசிறி ரெகுலெட்டர் | 14 |
| (23) டெப் ரெக்கோடர் | 01 |
| (24) அதி குளிரூட்டிப் பெட்டி | 01 |
| (25) மின்சாரக் கேத்தல் | 14 |
| (26) மின் அழுத்தி | 01 |
| (27) மின் துருவி | 02 |
| (28) மின் அஞ்சல் இயந்திரம் | 01 |
| (29) மின் வாயு அடுப்பு (21×21) | 13 |
| (30) மின் வாயு அடுப்பு (18×18) | 01 |
| (31) தகர வாளி | 86 |
| (32) மின் உற்பத்தி இயந்திரம் | 01 |
| (33) எரிவாயுத் தாங்கி (பெரியது) | 06 |
| (34) கேஸ்குக்கர் | 03 |
| (35) தோட்டக்கத்தரிக்கோள் | 01 |
| (36) புல்வெட்டும் இயந்திரம் | 01 |
| (37) ஆரிக்கன்லாம்பு | 50 |
| (38) கேலிகன் விளக்கு 500 வட் | 76 |
| (39) கேலிகன் விளக்கு 100 வட் | 37 |
| (40) மின்சூடாக்கி | 03 |
| (41) மின் அடுப்பு | 01 |
| (42) கேலிகன் விளக்கு 1500 வட் | 03 |
| (43) அரிக்கன் | 09 |
| (44) இரும்புக்கட்டில் (சிறியது) | 55 |
| (45) கட்டில் அருகுப்பட்டி | 14 |
| (46) இரும்புக்கட்டில் (இரட்டை) | 20 |
| (47) சம்மட்டி | 02 |
| (48) கத்திகள் | 39 |
| (49) மள்ட்டிபொட் | 04 |
| (50) மக்லைட் | 04 |
| (51) இரவு ரகன் விளக்கு | 57 |
| (52) இரவு ரகன் விளக்குச் சாஜர் | 04 |
| (53) எண்ணெய் தாட்சி | 10 |
| (54) பிக்காஸ் | 01 |
| (55) பூட்டு | 03 |
| (56) பெற்றோல் விளக்கு | 03 |
| (57) நில சுத்திகரிப்பு இயந்திரம் | 01 |
| (58) போட்டோ பிரதி இயந்திரம் | 02 |
| (59) ரயிஸ் குக்கர் | 01 |
| (60) வானொலி கசட் | 04 |
| (61) வீதி துப்பரவுசெய்யும் கருவி | 02 |
| (62) ரொட்டி மெக்கர் | 04 |
| (63) குளிர்சாதனப் பெட்டி | 01 |
| (64) குப்பை வாரி | 01 |
| (65) மீள் சார்ஜ் செய்யும் விளக்கு | 07 |
| (66) சமயல் பாத்திரங்கள் | 215 |
| (67) அலுமேனியம் கரண்டிகள் | 06 |
| (68) இரும்பு விளக்கு | 06 |
| (69) கத்தரிக்கோள் | 05 |
| (70) சமயல் பாத்திரம் (செட்) | 01 |
| (71) இரும்பு கபினட் | 01 |
| (72) சவள் | 03 |
| (73) ஸ்ப்பொட் லைட் தாங்கி | 14 |
| (74) ஸ்டப்லைசர் | 01 |
| (75) தட்டச்சு இயந்திரம் (ஆங்கிலம்) | 04 |
| (76) மேசை மின்விசிறி | 16 |
| (77) தொலைக்காட்சிப் பெட்டி (வர்ணம்) | 05 |
| (78) டியுப்லைட் (செட்) | 386 |
| (79) டொச்லைட் | 77 |
| (80) தட்டச்சு இயந்திரம் (சிங்களம்) | 07 |
| (81) தட்டச்சு இயந்திரம் (தமிழ்) | 02 |
| (82) கருப்பு வெள்ளை தொலைக்காட்சிப் பெட்டி | 01 |
| (83) வீசுக்கத்தி | 19 |
| (84) உடை அலுமாரி (இரும்பு) | 01 |
| (85) தண்ணீர் வடிகட்டி | 38 |
| (86) தண்ணீர் சூடாக்கி | 29 |
| (87) நீர் இரைக்கும் இயந்திரம் | 04 |
| (88) தண்ணீர் தாங்கி | 01 |
| (89) கணனி கதிரை | 01 |
| (90) உணவுப்பெட்டி | 104 |
| (91) குஸன் கதிரை | 03 |
| (92) தீயணைக்கும் கருவி | 01 |

பொலிஸ் அத்தியட்சகர்,
திருகோணமலைப் பிரிவு.

7-121

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்படி 9(1) இன் பிரகாரம் கீழ்காணும் கம்பனி 2009 ஆம் ஆண்டு யூன் மாதம் 8 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது :-

கம்பனியின் பெயர் : எஸ்கோல்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 68017
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 08.06.2009
அலுவலகத்தின் பதிவு முகவரி : இல. 150, சென் ஜோசப் வீதி, கொழும்பு 14.

கம்பனி செயலாளர்.

7-62

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

9 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனியின் கூட்டிணைத்தல் பற்றிய பொது அறிவித்தல்

கம்பனியின் பெயர் : புரோகெயர் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இல. : பீவீ 67714
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 05.05.2009
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 02, கீல்ஸ் கிறீன் ரெரஸ் 01, கஹன்தோட்டை வீதி, பிட்டுகல, மாலபே

டபிள்யூ. எஸ். வீரமன்,
செயலாளர்.

இல. 27/1, பெப்பிலியான வீதி,
நெதிமாலை,
தெஹிவளை.

7-63

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

*9 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகளின் கூட்டிணைத்தல் பற்றிய பொது அறிவித்தல்*

| | | |
|---|---|---|
| கம்பனியின் பெயர் | : | மொஸ்வில்லே ஹைட்ரோபவர் (பிறைவேட்) லிமிட்டெட் |
| கம்பனி இல. | : | பீவீ 64983 |
| கூட்டிணைக்கப்பட்ட திகதி | : | 31.07.2008 |
| பதிவுசெய்யப்பட்ட முகவரி | : | இல. 27/1, பெப்பிலியான வீதி, நெதிமாலை, தெஹிவளை |

| | | |
|---|---|---|
| கம்பனியின் பெயர் | : | லக்மார்ட் (பிறைவேட்) லிமிட்டெட் |
| கம்பனி இல. | : | பீவீ 64984 |
| கூட்டிணைக்கப்பட்ட திகதி | : | 28.07.2008 |
| பதிவுசெய்யப்பட்ட முகவரி | : | இல. 92/1ஏ, மொறகஸ்முல்லை வீதி, இராஜகிரிய |

| | | |
|---|---|---|
| கம்பனியின் பெயர் | : | திலக்க என்ஜினியரிங் என்ரபிறைஸஸ் (பிறைவேட்) லிமிட்டெட் |
| கம்பனி இல. | : | பீவீ 63830 |
| கூட்டிணைக்கப்பட்ட திகதி | : | 11.04.2008 |
| பதிவுசெய்யப்பட்ட முகவரி | : | இல. 5, சண்டிகுரோப்ட் வத்தை, மைத்திரிபால மாவத்தை, ஏக்கலை |

| | | |
|---|---|---|
| கம்பனியின் பெயர் | : | குளோபல் கலர் கோட்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் |
| கம்பனி இல. | : | பீவீ 63276 |
| கூட்டிணைக்கப்பட்ட திகதி | : | 03.03.2008 |
| பதிவுசெய்யப்பட்ட முகவரி | : | இல. 64/19, பிரிவேனை வீதி, இரத்மலானை |

| | | |
|---|---|---|
| கம்பனியின் பெயர் | : | திரீ சிங்ஹ ஓட்டோ மார்ட் (பிறைவேட்) லிமிட்டெட் |
| கம்பனி இல. | : | பீவீ 63086 |
| கூட்டிணைக்கப்பட்ட திகதி | : | 18.02.2008 |
| பதிவுசெய்யப்பட்ட முகவரி | : | இல. 1564, கோட்டே வீதி, இராஜகிரிய |

| | | |
|---|---|---|
| கம்பனியின் பெயர் | : | எப்பறல்ஸ் கிறாப்ட் (பிறைவேட்) லிமிட்டெட் |
| கம்பனி இல. | : | பீவீ 62421 |
| கூட்டிணைக்கப்பட்ட திகதி | : | 17.12.2007 |
| பதிவுசெய்யப்பட்ட முகவரி | : | இல. 5/1, நிக்கபே மாவத்தை, நெதிமாலை, தெஹிவளை |

| | | |
|---|---|---|
| கம்பனியின் பெயர் | : | சீ. ஏ. என்ரபிரைஸஸ் (பிறைவேட்) லிமிட்டெட் |
| கம்பனி இல. | : | பீவீ 62420 |
| கூட்டிணைக்கப்பட்ட திகதி | : | 17.12.2007 |
| பதிவுசெய்யப்பட்ட முகவரி | : | இல. 5/1, நிக்கபே மாவத்தை, நெதிமாலை, தெஹிவளை |

டபிள்யூ. எஸ். வீரமன்,
செயலாளர்.

இல. 27/1, பெப்பிலியான வீதி,
நெதிமாலை,
தெஹிவளை.

7-64

## அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச்செய்தல்

வெலிகாமம், புதிய தெரு, இலக்கம் 297 இல் வசிக்கும், தேசிய அடையாள அட்டை இலக்கம் 785121163V க்கு உரித்துடைய ஜெனி சுலைஹா ராசிக் ஆகிய நான், மேலே குறிப்பிட்ட முகவரியில் குடியிருக்கும் அடையாள அட்டை இலக்கம் 796251034V உரித்துடைய மொஹமட் லாபிர் பாதிமா ரொசான் என்பவருக்கு 2008.08.22 ஆந் திகதி வழங்கப்பட்ட இலக்கம் 3652 உடையதும் மாத்தறை பிரசித்தி பெற்ற நொத்தாரிசு கே. பீ. எரோசினி த சில்வா என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதுமான அட்டோர்ணித் தத்துவத்தை 2009.05.27 ஆந் திகதியிலிருந்து இல்லாதொழிக்கவும் இரத்துச் செய்யவும் அழிக்கவும்படுகின்றது என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஜெனி சுலைஹா ராசிக்.

7-73

---

## அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச்செய்தல்

கொழும்பு 14, லெயார்ட் புரோட்வே இல. 261 இல் வதியும் ஆயிஷதுல் துஹ்ரா ஆகிய நான், எனது அட்டோர்னி தத்துவக்காரர்களாக வெல்லம்பிட்டிய, வென்னவத்தை, ஜம்புகஹவத்தை இல. 102/E எனும் முகவரியில் வசிக்கும் (1) பாத்திமா முஷ்பிகா நிஹ்மதுல்லா (2) பாஸி ஹஸன் மொஹமட் ஷிராஸ் (Shiras) ஆகியோரை நியமித்து வழங்கப்பட்டதான கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எஸ். எச். எம். அமீர் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006.02.02 ஆந் திகதியும் 1074 எனும் இலக்கத்தையுடைய அட்டோர்ணி தத்துவப் பத்திரத்தை இரத்துச் செய்வதாக இத்தால் பொது மக்களுக்கும் அரசுக்கும் அறிவிக்கிறேன்.

ஆயிஷதுல் துஹ்ரா

7-83

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் எஸ் 320 (1) இன் கீழ் அறிவித்தல்

கோமத (கெரண்டீ) லிமிடெட்
(என் (பிபீஜி) 181)

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் விசேட தீர்மானம் 2009 ஆம் ஆண்டு யூன் மாதம் 4 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டது :

*தீர்மானிக்கப்பட்டது* :

"கம்பனியானது சுயவிருப்பத்தின் பேரில் முடிவுறுத்தப்படல் வேண்டும்"

கோலித எஸ். பீ. விஜேரட்ன,
செயலாளர்.

7-107

**அறிவித்தல்**

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கம் கம்பனிகள் கட்டளை சட்டத்தின் 9ஆம் பிரிவின் விதிகளின் பிரகாரம் கீழ் குறிப்பிடப்படும் கம்பனியானது கூட்டிணைக்கப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது :*

| | |
|---|---|
| *கம்பனியின் பெயர்* | *: கைக்காவல மைனிங் கம்பனி (பிரைவட்) லிமிட்டெட்* |
| *கம்பனி இலக்கம்* | *: பீவீ 67865* |
| *கூட்டிணைக்கப்பட்ட திகதி* | *: 2009, மே 21* |
| *பதிவு அலுவலகத்தின் முகவரி* | *: இல. DXA 4/1, மெனிங்டவுன் தொடர்மாடி, மாதா ரோட், கொழும்பு - 08* |
| *கம்பனி செயலாளர்* | *: அன்டன் பெர்னாண்டோ அசோசியேட்ஸ் பிரிவு இல. (2) 2002/124* |

*அன்டன் பெர்னாண்டோ அசோசியேட்ஸ்,*
*கம்பனி செயலாளர்.*

*7-108*

---

**அறிவித்தல்**

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கம் கம்பனிகள் சட்டத்தின் 9 (1) பிரிவின் பிரகாரம் கீழ்காணும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது :-*

| | |
|---|---|
| *கம்பனியின் பெயர்* | *: டி. எம். எல். ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிட்டெட்* |
| *கம்பனி பதிவு இலக்கம்* | *: பீவீ 68097* |
| *கூட்டிணைக்கப்பட்ட திகதி* | *: 12.06.2009* |
| *கம்பனி பதிவு செய்யப்பட்ட முகவரி* | *: இல. 9, ஹெஜஸ் கோர்ட், கொழும்பு 10* |

*லோரன்ஸ் அலெக்சாந்திரா பெர்னாண்டோ,*
*கம்பனிப் பணிப்பாளர்.*

*7-132*

---

**அறிவித்தல்**

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கம் கம்பனிகள் சட்டத்தின் 9 (1) பிரிவின் பிரகாரம் கீழ்காணும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது :-*

| | |
|---|---|
| *கம்பனியின் பெயர்* | *: ஸ்டேர்லிங் இன்வெஸ்ட் மென்ஸ் என்ட் டிவ்லொப்மன்ட் லங்கா (பிரைவட்) லிமிட்டெட்* |
| *கம்பனி பதிவு இலக்கம்* | *: பீவீ 68098* |
| *கூட்டிணைக்கப்பட்ட திகதி* | *: 12.06.2009* |
| *கம்பனியின் முகவரி* | *: இல. 9, ஹெஜஸ் கோர்ட், கொழும்பு 10* |

*லோரன்ஸ் அலெக்சாந்திரா பெர்னாண்டோ,*
*கம்பனிப் பணிப்பாளர்.*

*7-134*

---

**அறிவித்தல்**

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 5 ஆவது பிரிவின் கீழ் கூட்டிணைத்தல் தொடர்பாக அறிவிக்கப்படுகிறது :-*

| | |
|---|---|
| *நிறுவனத்தின் பெயர்* | *: சிறீ நுவன் கம்பியூட்டர்ஸ் என்ட் இலெக்ட்ரோனிக் (பிரைவட்) லிமிட்டெட்* |
| *ஆரம்பிக்கப்பட்ட திகதி* | *: 2009, பெப்புருவரி 17* |
| *நிறுவனத்தின் பதிவு இலக்கம்* | *: பீவீ 67070* |
| *பதிவிலக்க காரியாலயம்* | *: 37, பன்சல வீதி, இங்கிரிய* |

*நிர்வாக செயலாளர்.*

*7-136*

---

# ஏல விற்பனைகள்

**வரையறுக்கப்பட்ட டிஎவ்சீசீ வர்தன வங்கி**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

***3816 ஆம் இலக்க அடைமான பிணை உறுதி மூலம் அடகு வைக்கப்பட்ட உடைமையின் விபரம்***

**வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில், வேஉட வில்லி ஹத்பத்து, குடாகல்பொட கோரளே, அஸ்வெத்தும கிராமத்தில் அமைந்துள்ள, அஸ்வெத்துமவத்த என அழைக்கப்படும், பிரிக்கப்பட்ட காணி. அதிலுள்ள மரங்கள், தோட்டங்கள், கட்டடங்கள் உட்பட அனைத்தும் உள்ளடங்கியதாக பாதை உரிமைத்துவத்துடன்**

***(காணியின் விஸ்தீரணம் . 0ஏ. 0றூ. 16பே.)***

*(குருநாகல் பிரசித்த நொத்தாரிசு ரி. எஸ். ஐ. வெத்தேவ அவர்களால் 2006 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ஆந் திகதியன்று உறுதிப்படுத்தப்பட்ட 3816 ஆம் இலக்க பிணை உறுதி மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியதால், குருநாகலைச் சேர்ந்த கமரதிவல ஆரச்சிலாகே நீல் குமாரசிங்க மற்றும் உடுவெல முஹந்திரம் ராலலாகே விஜயந்தி மாலா விஜேகோன் ஆகியோரால் டிஎவ்சீசீ வங்கிக்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து )*

டிஎவ்சீசீ வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி, 2009 ஆம் ஆண்டு யூலை மாதம் 23 ஆந் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.-** ஏலவிற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரரின் தரகு 2.5 % (இரண்டரை சதவீதம்) ;
(4) மொத்த விளம்பரச் செலவான ரூ. 37,000.00 ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ.500;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூ.2,000.

கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங் களுடன் செலுத்தப்பட வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு**.- 011- 2440366/77 எனும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎவ்சீசீ வங்கியின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
அரச அங்கீகாரம் கொண்ட ஐஎஸ்ஓ 9001 : 2000
தரச் சான்றிதழ் பெற்ற ஒரேயொரு பிரபல முன்னோடி
பட்டய ஏலவிற்பனையாளர், பெறுமதி மதிப்பீட்டு
ஆலோசகர் மற்றும் காணித் தரகர்.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும் : |
|---|---|
| இல. 24, டொரிங்டன் வீதி, கண்டி. | இல. 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 05. |
| தொலைபேசி இல. : 081-2227593 | தொலைபேசி இல.: 011-2502680, 2585408 |
| தொ./ஃபெக்ஸ் : 081-2224371 | தொ./ஃபெக்ஸ் : 011-2588176 |
| மின்-அஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்-அஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.schokmanandsamerawickreme. com

7- 109

**வரையறுக்கப்பட்ட டீஎவ்சீசீ வங்கி**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

**4146 ஆம் இலக்க அடைமான பிணை உறுதி மூலம் அடகு வைக்கப்பட்ட உடைமையின் விபரம்**

**மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில், துணகஹபத்து, அலுத்குரு கோரளே, கடவலயில் அமைந்துள்ள, அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் எஸ். வெலகெதர அவர்களால் வரையப்பட்ட, 2000 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 15 ஆந் திகதியிடப்பட்ட 3656 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டுகள் 2 மற்றும் 3 எனக் குறிப்பிடப்பட்டுள்ள, கஹம்பிலிய வத்த எனக் குறிப்பிடப்படும் பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான காணி. அதிலுள்ள அனைத்தும் உள்ளடங்கியதாக.**

**(காணியின் விஸ்தீரணம் . துண்டு 2 - 00ஏ. 00றூ.12பே. துண்டு 3 - 00ஏ. 00றூ. 16பே.**

(குருநாகல் பிரசித்த நொத்தாரிசு ஏ. டபிள்யூ. குணவர்தன அவர்களால் 2006 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆந் திகதியன்று உறுதிப்படுத்தப்பட்ட 4146 ஆம் இலக்க பிணை உறுதி மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியதால், கட்டான தயாரத்ன டயர் வேர்க்ஸ் என்ற பெயரில் வியாபாரத்தை தனி உரிமைத்துவத்தடன் நடத்திவரும், கட்டானையைச் சேர்ந்த கம்மெலவீர தயாரத்ன சில்வா அவர்களால் டிஎவ்சீசீ வங்கிக்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து )

டிஎவ்சீசீ வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி, 2009 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை**.- ஏலவிற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரரின் தரகு 2.5 % (இரண்டரை சதவீதம்) ;
(4) மொத்த விளம்பரச் செலவான ரூ. 35,900.00 ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ.500;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூ.2,000.

கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங் களுடன் செலுத்தப்பட வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு**.- 011- 2440366/77 எனும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎவ்சீசீ வங்கியின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
அரச அங்கீகாரம் கொண்ட ஐஎஸ்ஓ 9001 : 2000
தரச் சான்றிதழ் பெற்ற ஒரேயொரு பிரபல முன்னோடி
பட்டய ஏலவிற்பனையாளர், பெறுமதி மதிப்பீட்டு
ஆலோசகர் மற்றும் காணித் தரகர்.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும் : |
|---|---|
| இல. 24, டொரிங்டன் வீதி, கண்டி. | இல. 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 05. |
| தொலைபேசி இல. : 081-2227593 | தொலைபேசி இல.: 011-2502680, 2585408 |
| தொ./ஃபெக்ஸ் : 081-2224371 | தொ./ஃபெக்ஸ் : 011-2588176 |
| மின்-அஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்-அஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.schokmanandsamerawickreme. com

7- 110

### செலான் வங்கி பீ. எல். சீ. – வவுனியா கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

***வடமாகாணம், வவுனியா மாவட்டம், வவுனியா பிரதேச செயலாளர் பிரிவு வவுனியா தெற்கு பட்டனிச்சுபுளியங்குளத்தில் அமைந்துள்ள சைபர் தசம் மூன்று ஏழு ஒன்பது ஹெக்டயர்ஸ் (0.0379 ஹெ.) இம்பீரியலுக்கு சமனான பதினைந்து பேர்ச் (0ஏ.0றூ.15பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ள அனுமதிபெற்ற நில அளவை யாளர் வி. எஸ். விஸ்வநாதன் என்பவரால் தயாரிக்கப்பட்ட 11.07.2004 திகதியிடப்பட்ட நிலவரைப்பட இல. 1136பி யிலுள்ள துண்டு 15 இன் மீள அளவீடு செய்யப்பட்டது என்ற வகையில்) அனுமதிபெற்ற நில அளவையாளர் எஸ். நாகரத்னம் என்பவரால் தயாரிக்கப்பட்ட 24.07.2006 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைப்பட இல. 0637 இல் குறிப்பிடப்பட்டுள்ள துண்டு 01 என அடையாளமிடப்பட்ட ''இட்டிக்காடு'' என்றழைக்கப்படுகின்ற பிரிக்கப்பட்டு அறியப்பட்டுள்ள காணித்துண்டு ஏலவிற்பனை***

*(கடன்பட்டோர் என்ற வகையில் வவுனியாவிலுள்ள எம். எஸ். ஸ்வர்னா டிரான்ஸ்போட் சேர்விசின் செல்லத்துரை சின்னத்தம்பி என்பவருக்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி பி. எல். சி. க்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.)*

மேலே விபரிக்கப்பட்ட ஆதனத்தை 2009, யூலை 30 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்.**– வவுனியா குருமன்காடு விலுள்ள டெம்பிள் வீதியூடாக பிரயாணம் செய்து டெம்பிள் வீதி 1வது லேன் அப்பால் பிரவேசித்து 150 மீற்றர் பிரயாணம் செய்து வீடமைப்பு காணித்துண்டுகளினுள் அபிவிருத்திக்கான திட்டம் அங்கீகரிக்கப்பட்ட துண்டுகளுக்கு அமைக்கப்பட்ட வழி கொண்ட ஒழுங்கைக்கு அப்பால் பிரவேசித்து இடது பக்கமாகத் திரும்புவதன் மூலம் குறிப்பிட்ட காணியைச் சென்றடையலாம்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**– 2009.04.24 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி, 2009.04.23 ஆந் திகதிய "டெயிலி மிரர்" மற்றும் "லங்காதீப" பத்திரிகைகளையும் மற்றும் 2009.04.27 ஆந் திகதிய "வீரகேசரி" பத்திரிகையையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**– வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் பத்துவீதம் (10%) ; (2) விற்பனை வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு ஒரு வீதம் (1%) ; (3) ஏலவிற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2.5%) ; (4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2,000 ; (5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் ரூபா 500 ; (6) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு அத்துடன் கொள்வனவு விலையின் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீஎல்சீ இல் வைப்புச் செய்தல் வேண்டும்.

காணி உறுதி மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை ''கொழும்பு 3, காலி வீதி, இல. 90, சிலிங்கோ செலான் டவர், செலான் வங்கி பீஎல்சீ, உதவி பொது முகாமையாளர் (சட்டம்)'' இடமிருந்து பெற்றுக்கொள்ளவும் பார்வையிடவும் முடியும். தொலைபேசி இல. 2456285, 2456263, 2456284.

துசித கருணாரத்ன (ச. நீ.),
அனுமதிபெற்ற ஏலதாரரும்
நீதிமன்ற ஆணையாளரும் மதிப்பீட்டாளரும்.

ரி. அன்ட் எச். ஒக்சன்,
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலொன்னாவ.
தொலைபேசி இல. 2696155, 2572940

7-147

---

### செலான் வங்கி பீ. எல். சீ. – அனுராதபுரம் கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

***வடமத்திய மாகாணம், அனுராதபுரம் மாவட்டத்தில், கனதார கோரளை நவரகம் பலாத்த கிழக்கு பிராந்திய செயலகப் பிரிவிலுள்ள அனுராதபுரம் மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள அனுமதிபெற்ற நில அளவையாளர் கே. கே. சின்னையா என்பவரால் தயாரிக்கப்பட்ட 16.3.2002 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைப்பட இல. 52 மீள் அளவையீடு செய்யப்பட்ட அத்துடன் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட FUPA 5 இல் குறிப்பிடப்பட்ட காணித்துண்டு 155 ''கொம்பிச்சன் குளம் ஹேன'' என்றழைக்கப்படுகின்ற துண்டு 1 மற்றும் 2 என அடையாள மிடப்பட்ட காணியின் இரண்டு உப பிரிவாக்கப்பட்ட பகுதிகளில் ஒரு துண்டின் அத்தியாவசியமான பகுதியாக இருந்துள்ள அனுமதிபெற்ற நில அளவையாளர் டி. பி. ஆரியசேன என்பவரால் தயாரிக்கப்பட்ட 11.01.2003 ஆந் திகதியிடப்பட்ட மீள அளவையிடப்பட்ட நிலவரைப்பட இல. 1989 மற்றும் உப பிரிவாக்கப்பட்டதில் துண்டு 1 என இப்பொழுது அடையாள மிடப்பட்ட இரண்டு காணித்துண்டுகளின் (ஒரு பகுதியாகிய) ஒதுக்கப்பட்ட காணித்துண்டு அங்கு காணப்படுகின்ற மரங்கள், பெருந்தோட்டங்கள் மற்றும் அனைத்துடனும் ஆறு பேர்ச்சஸ் (0ஏ.0றூ.6பே.) மாத்திரம் அல்லது 0.01515 ஹெக்டயார் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.***

மேற்கூறப்பட்ட காணித்துண்டு 1 கீழே நிரலிடப்பட்டுள்ள முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள காணியின் ஒரு பகுதியாக விளங்குகின்றது :-

***வடமத்திய மாகாணம் அனுராதபுரம் மாவட்டத்தில் கன்தர கோரளை நவரகம பலாத்த கிழக்குப் பிரிவில் அனுராதபுரம் கிழக்கின் நகர எல்லைக்குள் அமைந்துள்ள கொம்பிச்சன்குளம் ஹேன என்றழைக்கப்படுகின்ற காணிக்குப் புறம்பாகக் குறிப் பிடப்பட்டுள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப் பட்ட குறைநிரப்பு 2 தாள் இல. 2 இல் நிலவரைப்பட இல. FUP a5 இல் துண்டு 155 எனக் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டுகள் சைபர் தசம் சைபர் ஏழு சைபர் எட்டு ஹெக்டயார் (ஹெக். 0.0708) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.***

*(கடன்பட்டோர் என்ற வகையில் அனுராதபுரத்தைச் சேர்ந்த அஸ்வெத்தும ஆராச்சிலாகே கோசல கங்கநாத் குலதிலக மற்றும் உக்கு பண்டாகே குமுதினி ரத்நாயக்க ஆகிய இருவருக்கும் வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி பி. எல். சி. க்கு ஈடுவைக்கப்பட்ட ஆவணம்.)*

மேலே விபரிக்கப்பட்ட ஆதனத்தை அதே இடத்தில் 2009, யூலை 30 ஆந் திகதி பி. ப. 3.00 மணிக்கு பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்.**- அனுராதபுரம் புதிய நகரின் தனஹயகம சந்தியிலிருந்து புலன்குளம் திஸாவவே மாவத்தையிலுள்ள சந்தியைத் தாண்டி 1 மீற்றர் புபுதுபுரவை நோக்கி நேராக 1 கி. மீ. பிரயாணம் செய்து குறிப்பிட்ட காணியைச் சென்றடைவதற்கு சுமார் 30 மீற்றர் பிரயாணம் செய்யவும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2008.05.30 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி, 2008.10.17 ஆந் திகதிய "டெயிலி மிரர்" "லங்காதீப" மற்றும் 2008.10.19 ஆந் திகதிய "வீரகேசரி" பத்திரிகையையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் பத்துவீதம் (10%) ; (2) விற்பனை வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு ஒரு வீதம் (1%) ; (3) ஏலவிற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2.5%) ; (4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2,000 ; (5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் ரூபா 500 ; (6) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு அத்துடன் கொள்வனவு விலையின் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீஎல்சீ இல் வைப்புச் செய்தல் வேண்டும்.

காணி உறுதி மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை "கொழும்பு 3, காலி வீதி, இல. 90, சிலிங்கோ செலான் டவர், செலான் வங்கி பீஎல்சீ, உதவி பொது முகாமையாளர் (சட்டம்)" இடமிருந்து பெற்றுக்கொள்ளவும் பார்வையிடவும் முடியும். தொலைபேசி இல. 2456285, 2456263, 2456284.

துசித கருணாரத்ன (ச. நீ.),
அனுமதிபெற்ற ஏலதாரரும்
நீதிமன்ற ஆணையாளரும்.

ரி. அன்ட் எச். ஒக்சன்,
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலொன்னாவ.
தொலைபேசி இல. 2696155, 2572940 மற்றும் 0602068185

7-148

---

### இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்*

#### சொத்துக்கள் நிலமனை ஏல விற்பனை

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2008, ஒற்றோபர் 03 ஆந் திகதிய 1570 ஆம் இலக்க வர்த்தமானியிலும், 2008, செத்தெம்பர் 24 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "தினமின", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன்கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் கோவில் வீதி, குளியாப்பிட்டிய என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. ஜே. அல்பியஸ் பெரேரா 2009, ஓகத்து 27 ஆந் திகதிய மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

#### அட்டவணை

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், மகுல்தொற்ற கோரளை வன்னி ஹத்பற்றுவில் நிகவெரட்டிய பிரதேச சபை எல்லைகளுள் கந்தேகெதரயில் அமைந்த 'இஹல அமுஹேன' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. ஜீ. பந்துதிலக்க தயாரித்த 2002, நவெம்பர் 22 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 7547/2002 இல் விபரித்த துண்டு 233 என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு- வடக்கில் : துண்டு 128 உம் ; கிழக்கில் : துண்டுகள் 133 மற்றும் 232 உம் பாதைக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் பகுதியும் ; தெற்கில் : பிரதான றோட்டுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் றோட் துண்டு 136 உம் ; மேற்கில் : துண்டு 234 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 7547 இன்படி இரண்டு ஏக்கர் ஒரு றூட் முப்பத்தெட்டு பேர்ச்சுகள் (2ஏ. 1றூ. 38பே.) விஸ்தீரணமுடையதாகும். இது நிக்கவெரட்டிய காணிப்பதிவகத்தில் ஏ64/10 இல் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர்கள் சபை கட்டளைப்படி,

திரு. ஜீ. பீ. எல். அமரசூரிய,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
கெக்கிராவ கிளை.

7-141

---

### இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்*

#### சொத்துக்கள் நிலமனை ஏல விற்பனை

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2009.05.29 ஆந் திகதிய 1604 ஆம் இலக்க வர்த்தமானியிலும், 2009.05.15 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "தினமின", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன்கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 39, வில்பிரெட் குணசேகர மாவத்தை, கோட்டை, மாத்தறை எனும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. எம். எச். பத்மானந்த சிறிவர்த்தன 2009.07.26 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

தென் மாகாணம், காலி மாவட்டம், கங்கபடபற்று தெற்கில் கினிமல்லகஹயில் அமைந்ததும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஜீ. டி. யூ. கருணாரத்ன தயாரித்த 1995, ஓகத்து 18 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 724 இல் விபரித்த ஹிரிமுல்லவத்த என அழைக்கப்படும் காணியின் பிரிக்கப்பட்ட துண்டு 14- வடக்கில் : ரத்கமயிலிருந்து சந்தரவல வரை றோட்டும் ; கிழக்கில் : அதே காணியின் துண்டு 13 உம் ; தெற்கில் : எல்லகும்புரயும் ; மேற்கில் : அதே காணியின் துண்டு 16 உம் எல்லைகளாகக் கொண்டு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. பீ. டீ. யூ. கருணாரத்ன தயாரித்த 1995, ஓகத்து 18 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 724 இன்படி ஆறு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 6பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது காலி காணிப்பதிவகத்தில் எச் 138/230 இல் பதிவுசெய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்ட துண்டு 14 உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஜீ. டீ. யூ. கருணாரத்ன தயாரித்த 2006, செத்தெம்பர் 2 ஆந் திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல. 3677 இன்படி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது :

மேற்குறிப்பிட்ட கினிமல்லகஹயில் அமைந்ததும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஜீ. டி. யூ. கருணாரத்ன தயாரித்த 2006, செத்தெம்பர் 2 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 3677 இல் விபரித்த ஹிரிமுல்லவத்த என அழைக்கப்படும் காணியின் பிரிக்கப்பட்ட துண்டு 14- வடக்கில் : ரத்கமயிலிருந்து சந்தரவல வரை பெருந்தெருவும் ; கிழக்கில் : அதே காணியின் துண்டு 13 உம் ; தெற்கில் : எல்லகும்புரயும் ; மேற்கில் : அதே காணியின் துண்டு 16 உம் எல்லைகளாகக் கொண்டு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. பீ. டீ. யூ. கருணாரத்ன தயாரித்த 2006, செத்தெம்பர் 2 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 3677 இன்படி ஆறு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 6பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும்.

பணிப்பாளர்கள் சபை கட்டளைப்படி,

திருமதி என். ஏ. கமகே,
கிளை முகாமையாளர்.

இலங்கை வங்கி,
பத்தேகம.

7-142

---

### இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்*

### சொத்துக்கள் நிலமனை ஏல விற்பனை

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2009.05.29 ஆந் திகதிய 1604 ஆம் இலக்க வர்த்தமானியிலும், 2009.05.15 ஆந் திகதிய ''டெய்லி நியூஸ்'', ''தினமின'', ''தினகரன்'' ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன்கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 39, வில்பிரெட் குணசேகர மாவத்தை, கோட்டை, மாத்தறை எனும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. எம். எச். பத்மானந்த சிறிவர்த்தன 2009.07.19 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### முதலாவது அட்டவணை

தென் மாகாணம், காலி மாவட்டம், தல்பே பற்றுவில் அங்குலுகஹவில் அமைந்த சுட்டுப்பிட்டியே முல்லே பெத்த என அழைக்கப்படும் காணியின் துண்டு இல. 4 இன் துண்டு 2 என அடையாளமிட்ட காணித்துண்டு- வடக்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 713ஏ இல் விபரித்த துண்டு இல. 7 (றோட்) மற்றும் துண்டு இல. 3 உம் ; கிழக்கில்: துண்டு இல. 7 உம் (றோட்) ; தெற்கில் : துண்டு இல. 3 மற்றும் துண்டு இல. 7 (றோட்) ; மற்றும் மேற்கில் : வரைபடம் இல. 713ஏ இல் விபரித்த துண்டு இல. 3 உம் எல்லைகளாகக் கொண்டு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சீ. குணவர்த்தன தயாரித்த 2006, ஒற்றோபர் 6 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 714 இன்படி பதினெட்டு தசம் ஒன்பது ஏழு (0ஏ. 0றூ. 18.97பே.) அல்லது ஹெக்டெயர்கள் 0.0480 விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது காலி காணிப்பதிவகத்தில் டி 921/25 இல் பதிவுசெய்யப்பட்டது.

### இரண்டாவது அட்டவணை

மேற்குறிப்பிட்ட அங்குலுகஹவில் அமைந்த சுட்டுப்பிட்டியேமுல்லே பெத்த என அழைக்கப்படும் காணியின் துண்டு இல. 4 இன் துண்டு இல. 7 என அடையாளமிட்ட காணித்துண்டு- வடக்கில் : காலியிலிருந்து மொரவக்க வரை பி. டபிள்யூ. டி. றோட்டும், அதே காணியின் துண்டு இல. 1 மற்றும் 2 உம் ; கிழக்கில் : அதே காணியின் துண்டு இல. 1, 5 மற்றும் 6 உம் ; தெற்கில் : துண்டு இல. 5 உம் பிரதான றோட்டிலிருந்து வீடு வரை றோட்டும் ; மேற்கில் : அதே காணியின் துண்டு இல. 2, 3 மற்றும் 4 உம் எல்லைகளாகக் கொண்டு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சீ. குணவர்த்தன தயாரித்த 2006, ஒற்றோபர் 6 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 714 இன்படி இருபத்திரண்டு தசம் எட்டு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 22.8பே.) விஸ்தீரணமுடையது. இது காலி காணிப்பதிவகத்தில் டி 921/202 இல் பதிவுசெய்யப்பட்டது.

பணிப்பாளர்கள் சபை கட்டளைப்படி,

டி. கே. என். பியசோம,
பிரதான முகாமையாளர்.

இலங்கை வங்கி,
காலி மேற்றரக் கிளை.

7-144

## இலங்கை வங்கி

*இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும்கீழ் விற்பனை அறிவித்தல்*

### சொத்துக்கள் நிலமனை ஏல விற்பனை

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2009.05.29 ஆந் திகதிய 1604 ஆம் இலக்க வர்த்தமானியிலும், 2009.05.15 ஆந் திகதிய ''டெய்லி நியூஸ்'', ''தினமின'', ''தினகரன்'' ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன்கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 39, வில்பிரெட் குணசேகர மாவத்தை, கோட்டை, மாத்தறை எனும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. எம். எச். பத்மானந்த சிறிவர்த்தன 2009.07.25 ஆந் திகதிய மு. ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், கந்தபொடபற்றுவில் ஹக்மன பிரதேச சபை எல்லைகளுக்குள் நைவல கிராமத்தில் ஹக்மன-பெலியத்த பிரதான றோட்டில் அமைந்ததும் மாரகஹஇரிகொந்த என அழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சீ. எஸ். ஜயவர்த்தன தயாரித்த 1998.07.11 ஆந் திகதியிட்ட அளவை வரைபடம் இல. 6203 இல் விபரித்த துண்டு 2 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு- வடக்கில் : ஹக்மன-பெலியத்த பிரதான றோட்டும், துண்டு 1 உம் ; கிழக்கில் : கொரகடன்டயும் ; தெற்கில் : ஜீ. எச். பார்னிஸ் அப்புவுக்கும் ஏனையோருக்கும் சொந்தமான அதே காணியின் பகுதியும் ; மேற்கில் : பிரதான றோட்டிலிருந்து உடுபீலிகொட வரை றோட்டும் துண்டு 1 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 6203 இன்படி இருபத்துநான்கு தசம் ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 24.5பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது மாத்தறை காணிப்பதிவகத்தில் ஈ 443/230 இல் பதிவுசெய்யப்பட்டது.

பணிப்பாளர்கள் சபை கட்டளைப்படி,

திருமதி எம். வல்கமகே,
கிளை முகாமையாளர்.

இலங்கை வங்கி,
ஹக்மன.

7-146

## செலான் வங்கி பீ. எல். சீ. – யாழ்ப்பாணக்கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வடமராட்சி பருத்தித்துறையின் மாதா கோயில் பகுதியிலுள்ள பருத்தித்துறை மலவரய குறிச்சி மற்றும் புலோலி மேற்கிலுள்ள வென்ரைபகுதேவன் குறிச்சி, சிங்க பகுதேவன் குறிச்சியில் அமைந்துள்ள பதினொரு லாச்சம் இரண்டு தசம் ஐந்து சைபர் குழிகள் (11Lms 2.50 kls) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ள பருத்தித்துறை அனுமதிபெற்ற நில அளவையாளர் ஏ. வேல்முருகுவினால் தயாரிக்கப்பட்ட 2006.03.30 ஆந் திகதியுடைய நிலவரைப்பட இல. 2062 இல் துண்டு 1 எனக் குறிப்பிடப்பட்டுள்ள ''பிக்கலட்டி, தின்னைக்களடி, கரனையுமையனோலை, கொட்டன் பெரியன்சீம, கொம்பைக்கலடி மற்றும் நம்பியனோலை'' என்றழைக்கப்படுகின்ற காணியின் சகல துண்டுகளும். இது காணிப்பதிவகத்தில் பருத்தித்துறை டிவிஷன் ஏ பரிமாணம் 635 பக்கம் 256 தலைப்பின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

*(''கடன்பட்டோர்'' என்ற வகையில் 2002.10.22 ஆந் திகதியிடப்பட்ட பதிவு இல. J/DS/BR/666 இன்கீழ் ''பி. ரி. ஆர். டிடேர்ஸ்'' என்ற நிறுவனம் பெயர் வடிவின்கீழ் பங்குடமை வியாபாரத்தை நடாத்தி வருகின்ற பொன்னுத்துரை தவராசா மற்றும் சிவதேவி தவராசா ஆகிய இருவருக்கும் வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி பீ. எல். சீ. க்கு ஈடுவைக்கப்பட்ட ஆவணம்.)*

மேலே விபரிக்கப்பட்ட ஆதனத்தை அதே இடத்தில் 2009, ஓகத்து 04 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்குப் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்.-** யாழ்ப்பாணம் மத்திய பஸ் தரிப்பு நிலையத்திலிருந்து பருத்தித்துறைக்கு பருத்தித்துறை வீதி ஊடாகப் பிரயாணம் செய்து பின்னர் மந்திகை அரசாங்க வைத்தியசாலை மற்றும் பின்னர் முதலாவது மைல் கட்டை அருகாமையிலுள்ள கிராமிய நீதிமன்ற சந்தியைத் தாண்டி நினதியன்பட்டை லேன் என்றழைக்கப்படுகின்ற பிரதேச சபை ஒழுங்கைக்குத் திரும்பி இந்த ஒழுங்கையில் சிறிது தூரம் பிரயாணம் செய்து குறிப்பிட்ட ஆதனத்தில் நிறுத்தப்படுகின்ற தனியார் ஒழுங்கையில் திரும்பவும். இந்த ஆதனம் பருத்தித்துறையிலிருந்து கிட்டத்தட்ட 2 கி. மீ. மற்றும் யாழ்ப்பாண நகரத்திலிருந்து 33 கி. மீ. தூரத்திலும் உள்ளது.

